

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் தென்னை பயிரில் வேர் வாடல் நோயால் பாதிப்பு குறித்து விவசாயிகள், வேளாண்துறை அலுவலர்களுடனான கருத்துரை கூட்டம் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. அருகில் வேளாண் உற்பத்தி ஆணையர் / வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், தோட்டக்கலை மலை பயிர்கள் துறை இயக்குனர் குமரவேல் பாண்டியன், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, வேளாண்மை பல்கலைக் கழகம் திருமதி.கீதா லட்சுமி, தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் அறவாழி ஆகியோர் உள்ளனர்.

தஞ்சை வடக்கு – மத்திய – தெற்கு மாவட்டத்திற்கு

# கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்-கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

## மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தஞ்சாவூர், மார்ச்1 -

தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்டத்திற்கு கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை தர உள்ளதால் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ள வைப்பது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு. கல்யாண சுந்தரம் எம்.பி - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்களது அறிக்கை வருமாறு : தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத்தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி, 2024 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க தேர்தல் அறிகைகை தயாரிக்கும் குழு கழக துணை பொதுச்செயலாளர், நாடாளுமன்ற கழக குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி, தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழநிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி, எம்.எம்.அப்துல்லா எம்.பி, சென்னை மேயர் பிரியா உள்ளிட்ட குழுவினர் இன்று (மார்ச்1 ஆம் தேதி) காலை 09.00 மணிக்கு தஞ்சை - நாகை சாலையில் உள்ள குருதையாள் சர்மா திருமண மண்டபத்தில் பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

அதுசமயம் தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த தொழில்துறையினர், வியபாரிகள், கல்வியாளர்கள், விவசாயிகள், சிறுகுறு தொழில் முனைவோர், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலந்துக்கொண்டு தங்களது கருத்துகளை மனுக்களாக வழங்கிட ஏதுவாக மேற்கண்ட அனைவருக்கும் தகவல் தெரிவித்து அவர்களை தஞ்சைக்கு அழைத்து வர உரிய ஏற்பாடுகளை அந்தந்த மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் செய்ய கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ அறிக்கை விடுத்துள்ளனர்.

விழுப்புரத்தில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

# கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

## தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம், மார்ச் 1-

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழகத் துணை பொதுச்செயலாளர் நாடாளுமன்ற குழு துணை தலைவர் திருமதி. கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் தலைமையில் நாடாளுமன்ற குழு தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்கள் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்..இளங்கோவன் எம்.பி, டெல்லி சிறப்பு பிரதிநிதி, மாநில விவசாய அணி செயலாளர் ஏ. கே. எஸ். .விஜயன், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் முனைவர் பி. டி. ஆர். பழனிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர், மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி. ஆர். பி. ராஜா, தமிழ்நாடு அரசு கொறடா கோ.வி.செழியன் எம்.எல்.ஏ, மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர். என்.ராஜேஷ்குமார் எம்.பி, மாநில மாணவர் அணி செயலாளர் சி. வி. எம். பி. .ஏழிலரசன் எம்.எல்.ஏ, மாநில அயலக அணி செயலாளர் எம் .எம்.அப்துல்லா எம்.பி, மாநில மருத்துவ அணி செயலாளர் டாக்டர் என்.ஏழிலன் எம்.எல்.ஏ, சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ஆகியோர் பங்கேற்கின்றனர். தமிழ்நாட்டில் முக்கிய இடங்களில் பயணம் செய்து பொதுமக்கள் மற்றும் அனைத்து சங்க நிர்வாகிகளை சந்தித்து தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பணி செய்து வருகிறார்கள்.

அவ்வமயம் விழுப்புரம் மாவட்டத்தில் நாளை (02. 03.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு கழகத் துணை பொதுச்செயலாளர் முனைவர் க. பொன்முடி முன்னிலையில் விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் விழுப்புரம் கலைஞர் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள வி. வி. ஏ. ஆறுமுகம் திருமண மண்டபத்தில் தேர்தல் அறிக்கை குழு வருகை தர உள்ளதால் விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட விவசாய சங்கங்கள், மீனவர் சங்கங்கள், வணிகர் சங்கங்கள், சிறு, குறு தொழில் முனைவோர், மகளிர் சுய உதவிக் குழுக்கள், பால் உற்பத்தியாளர் சங்கங்கள், மாணவர்கள் சங்கம், நெசவாளர் சங்கங்கள், தொழில் முனைவோர், பேருந்து, வேன், ஆட்டோ உரிமையாளர் சங்கங்கள், காய்கறி மற்றும் பழம் விற்பனையாளர் சங்கங்கள், பத்திரிக்கையாளர் சங்கம், மண்பாண்ட தொழிலாளர்கள், அரசு ஊழியர் பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் ஒன்றிய அரசின் மூலம் நிறை வேற்றப்பட வேண்டிய கோரிக்கை மனுக்களை நாடாளுமன்ற குழு தயாரிப்பு குழுவிடம் வழங்கலாம் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தி.மு.கழக இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.இதில் கழக இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் நா. சந்திரபாபு தயாரித்து வழங்கிய ‘எம்.கே. ஸ்டாலின் சார் வி லவ் யூ ‘ என்ற கழகப் பிரச்சார பாடல் ஒளிப்பட நாடாவை கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் வெளியிட இலக்கிய அணி தலைவர் புலவர் இந்திரகுமாரி,இலக்கிய அணி செயலாளர் வி.பி. கலைராஜன் பெற்றுக் கொண்டனர்.உடன் புரவலர் வழக்கறிஞர் நா.செந்தில்,பெருநாழி போஸ்,பிரம்மபுரம் பழனி,பாடலாசிரியர் வெ.மதன்குமார் உள்ளனர்.

திருச்சி தெற்கு மாவட்டத்தில் தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சிகள் 100 ஜீன் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை 90 நிகழ்ச்சிகள் நிறைவு மார்ச் 2024 மாத நிகழ்வுகள் 09 (மொத்தம் இதுவரை - 99)



## அமைச்சர் - மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 91. 01/03/24 03.30PM | மணப்பாறை தொகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலை திறப்பு விழா | திருச்சி தெற்கு மாவட்ட கழகம் | மாவட்ட கழக செயலாளர் | ஆசிரியர்.கி.வீரமணி அவர்கள் திராவிடர் கழக தலைவர் |
| 92. 02/03/24 05.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும்கூட்டம் மற்றும் கழக நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் | வார்டு எண் -50,50A பாலக்கரை பகுதி | ரா.சீனிவாசன் அ.ஞானசேகர் வட்ட கழக செயலாளர்கள் | தமிழ்.க.அமுதரசன் தலைமை கழக பேச்சாளர் |
| 93. 03/03/24 05.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 47,47A பொன்மலை பகுதி | நாகவேணி.வே.மாரிமுத்து ஆர்.பி.மனோகரன் வட்ட கழக செயலாளர்கள் | பசும்பொன் ரவிச்சந்திரன் தலைமை கழக பேச்சாளர் |
| 94. 04/03/24 05.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 31,31A அரியமங்கலம் பகுதி | எஸ்.கே.கருப்பையா எம்.ஐ.இ.டி.சாகுல் வட்ட கழக செயலாளர்கள் | ஆடுதுறை உத்ராபதி தலைமை கழக பேச்சாளர் |
| 95. 05/03/24 05.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர்புகழ் சேர்க்கும்கூட்டம் மற்றும் கழக நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C.கங்காதரன் ஒன்றிய கழக செயலாளர் | ஐ.பெரியசாமி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கழக துணை பொது செயலாளர் |
| 96. 06/03/24 05.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பரப்பும்பொதுக்கூட்டம் | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | சி.செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர் | மு.பெ.சாமிநாதன் செய்தித்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் |
| 97. 07/03/24 05.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர்புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்- 20,20A மார்க்கெட் பகுதி | எஸ்.எஸ்.சுருளிராஜன் எ.செந்தில்குமார் வட்ட கழக செயலாளர்கள் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி தலைமை கழக பேச்சாளர் |
| 98. 08/03/24 05.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 42,42A திருவெறும்பூர் பகுதி | கே.திருமாறன் ம.புண்ணியமூர்த்தி வட்ட கழக செயலாளர்கள் | இரா.சபாபதி மோகன் தலைமை கழக பேச்சாளர் |
| 99. 09/03/24 05.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 63,63A கலைஞர் நகர் பகுதி | எஸ்.கலியமூர்த்தி ஜி.எம்.மகாலிங்கம் வட்ட கழக செயலாளர்கள் | ஈரோடு இளையகோபால் தலைமை கழக பேச்சாளர் |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
செயலாளர் – திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

தமிழக முதல்வரும் கழக தலைவருமான, திராவிட நாயகனின் 71வது பிறந்தநாள் விழா !

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் கழக இருவண்ணக் கொடியேற்றி - நலத் திட்ட உதவிகள் வழங்குதல் !

## மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, மார்ச் 1-

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு-

திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நலத்திட்ட உதவிகள், மரம் நடுதல், இரத்தம் தானம் செய்தல் கழக கொடி ஏற்றுதல் என பொது மக்களுக்கு பயன்படும் வகையில் மாதம் முழுவதும் எழுச்சியாக கொண்டாட வேண்டும் .

மேலும் பகுதி, ஒன்றிய, நகர,பேரூர் கழகங்களில் கழக இருவண்ண கொடியேற்றியும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும், பின்னர் மாவட்ட கழகத்தால் அறிவிக்கப்பட்ட, தேர்தல் பார்வையாளர்கள் அனைத்து வட்ட, வார்டு, ஊராட்சிகளிலும் கொடியேற்றி நலத்திட்டங்களை வழங்கிட ஏதுவாக மேற்கண்டபடி நிகழ்ச்சி ஏற்பாடுகளை அந்தந்த பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஒப்புதலுடன் வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் நிகழ்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தி வேண்டுமாய் கேட்டுகொள்கின்றேன் .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## முரசொலி உரிமை விளக்கம் படிவம் – 4 விதி – 8

| | | |
|---|---|---|
| பிரசுரிக்கும் இடம் | – | முரசொலி அச்சகம், 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |
| பிரசுர முறை | – | நாளிதழ் |
| வெளியிடுபவர் & அச்சிடுபவர் | – | கார்த்திகேயன் சண்முகசுந்தரம் |
| ஆசிரியர் பெயர் | – | கார்த்திகேயன் சண்முகசுந்தரம் |
| இனம் | – | இந்தியன் |
| முகவரி | – | 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |
| உரிமையாளர் பெயர் | – | முரசொலி அறக்கட்டளை |
| மற்றும் முகவரி | | 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் நான்அறிந்த வகையில் உண்மையானவை என்று நம்பிக்கையுடன் கூறுகிறேன்.

சென்னை
01.03.2024

கார்த்திகேயன் சண்முகசுந்தரம்
(ஒப்பம்)
வெளியிடுபவர்


# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பேராசிரியர் மா.இளஞ்செழியன்
மார்ச் 1 (2009)



தி.மு.க. தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

தந்தை காஞ்சி மணிமொழியாருடன் இணைந்து 1947களில் ‘போர்வாள்’ சொந்தமாக நடத்தி, அதன் ஆசிரியராக செயல்பட்டவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் பேராசிரியாகவும், அதன்பின் கல்லூரி முதல்வராகவும் விளங்கிய இவர் ‘தமிழன் தொடுத்த போர்’, ‘அறிஞர் அண்ணாதுரை’, ‘ஈரோட்டுப் பாதை’ ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இளஞ்செழியன் நடத்திய ‘போர்வாள்’ ஏடு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் கரங்களில் போர்வாளாகவே மின்னிக் கொண்டிருந்தது.

“இளஞ்செழியன் எழுதிய ‘தமிழன் தொடுத்த போர்’ என்கின்ற அந்த நூலும், இன்னமும் தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு நமக்கெல்லாம் பக்க பலமாக இருக்கக்கூடிய ஒரு பெட்டகம் ஆகும்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.